நாளை திராவிடத் தத்துவத்தின் சாதனைக்கான பாராட்டு விழா! கோவையில் 'பெரியார் அறிவுலகம்' அமைத்த

'திராவிட நாயகர்' மு.க.ஸ்டாலினுக்குப் பாராட்டு - இது தனி மனிதருக்கான பாராட்டு அல்ல!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!







சென்னை, அக். 3-

கோவையில் 'பெரியார் அறிவுலகம்' அமைத்த முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை பாராட்டுவது என்பது தனி மனிதருக்கான பாராட்டு அல்ல! என்றும் இந்தப் பாராட்டு திராவிடத் தத்துவத்தின் சாதனைக்கான பாராட்டு! என்றும் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

கோவையில் நாளை (அக். 4) புதன் கிழமை காலை புத்துணர்வுப் பூத்துக் குலுங்கும் காட்சியை நமது இயக்கம் படைத்திட உள்ளது. 'திராவிட மாடல்' ஆட்சி நடத்திய, தி.க.கெட்டும் திராவிடப் பண்பாட்டை நிலை நிறுத்திய, 'திராவிட நாயகர்' தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவு ஆசான் பகுத்தறிவுப் பகலவன் பெயரால், 'பெரியார் அறிவுலகம்' என்ற புதியதோர் அறிவுச்சோலையை 300 கோடி ரூபாய் செலவில் அமைத்து, 'இனிவரும் உலக'த்துக்கு அய்யா வழிகாட்டியதைப் போல, வருங்காலத் தலை முறைகளுக்கு வழிகாட்டி, விழி திறக்கும் வகையில் செய்த சீர் மிகு சிறப்பு நூலகத்தினை கோவையில் அமைத்துள்ளார்.

அதனை இன்றைய ஆட்சியின் முதலமைச்சர் கடந்த அக்டோபர் 16 அன்று திறந்து வைத்தார் என்றாலும், 'திராவிட மாடல்' ஆட்சியின் முதலமைச்சர்தான் இந்தத் திட்டத்தை அறிவித்து, நிதி ஒதுக்கிச் செயல்பட வைத்தவர். இடையில் தேர்தல் அறிவிப்புக் குறுக்கீடுகளால் திறப்பு விழா தள்ளிப் போனது.

உருவாக்கியவருக்கு, உள்ளம் வழிய நன்றி - பாராட்டினை வழங்குவது நமது இயக்க அடையாளப் பண்பல்லவா?

எல்லையற்ற மகிழ்ச்சி அடைகிறோம்!

அதனால், கோவையில் நன்றி - பாராட்டுத் திருவிழாவும், தந்தையின் 148 ஆம் பிறந்த நாள் பெருவிழாவும் மிகச் சிறப்பான வகையில் கழகச் செயல் வீரர்களால் ஏற்பாடு செய்யப் பட்டு வருவது அறிந்து எல்லையற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

வ.உ.சி. மைதானத்தில் கருஞ்சட்டைக் கடல் பொங்கிக் காணப்படவேண்டும்.

இயக்கக் கொள்கைத் துறவிகளான பாசறை வீரர்களுக்கு மறைமலைநகரில் சென்ற ஆண்டு 'சல்யூட்' தந்த திராவிட நாயகருக்கு நாம் நன்றி பாராட்டி, கோவை பெரியார் அறிவுலகத் திருப்பணிக்கு - அகிலம் வியக்கும் அத்திட்டத்திற்கு - நமது நன்றியை, பாராட்டுப் பெருமழையைப் பொழியச் செய்யவேண்டாமா?

நமது கடமை - எனக்கு மருந்து, மாமருந்து!

ஒரு மாத இடைவெளிக்கிடையே உங்களைச் சந்திப்பதும், இதுபோல வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பாராட்டுவதும் நமக்குக் கடமை - எனக்கு மருந்து, மாமருந்து!

எனவே, திரண்டு வாருங்கள், குடும்பம் குடும்பமாக வாருங்கள்!

தனது சாதனைச் சேய்தனை உச்சிமோந்து மெச்சிக் கொண்டாடுவதைவிட தாய்க்கு, தாய்க் கழகத்துக்கு ஏது வேறு பெருமை?

காலத்தை வெல்லும் பெரியார் அறிவுலகம்!

மு.க.ஸ்டாலின் அவர்களைப் பாராட்டுவது என்பது, தனி மனிதருக்கான பாராட்டு அல்ல - ஒரு தத்துவத்தின் சாதனைக்கான பாராட்டு!

காலத்தை வெல்லும் 'பெரியார் அறிவுலகம்' - கண்டு மகிழ வாருங்கள், ஓடிவாருங்கள்!

நவம்பர் 4 - கோவை வரலாறு படைக்கட்டும்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம் – காரைக்குடியில்

புனரமைக்கப்பட்ட பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலை!

முன்னாள் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் திறந்து வைத்தார்!

சிவகங்கை . நவ.3-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் 2007 ஆம் ஆண்டு எஸ் .ஆர். தேவர் முயற்சியால் நகராட்சி அலுவலகம் அருகில் 100அடி சாலையில் பசும் பொன் முத்துராம லிங்கத் தேவரின் முழு உருவ வெண்கல சிலை பீடத்துடன் அமைக்கப்பட்டது. 2007 இல் அமைக்கப்பட்ட பசும்பொன் முத்துராம லிங்கத் தேவர் சிலையை அப்போதைய துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார் .19 ஆண்டுகளுக்கு பின் அந்த சிலை புனரமைக்கப்பட்டு நேற்று முன்தினம் முன்னாள் அமைச்சர் சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கு எஸ் .ஆர் . தேவர் தலைமை தாங்கினார். நிகழ்ச்சிக்கு முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் மூவேந்தர் முன்னேற்ற பேரவை மாநில இளைஞரணி செயலாளர் பி செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

நிகழ்ச்சியில் தென்னிந்திய பார்வர்ட்பிளாக் தலைவர் திருமாறன்ஜி, மதுரை நான்காம் தமிழ்ச் சங்க தலைவர்இருமதி துரை. கருணாநிதி, மாவட்ட கழக துணை செயலாளர்த. சேங்கைமாறன், முன்னாள் ஒன்றிய குழு தலைவர் நல்ல சேதுபதி காரைக்குடி மாநகர செயலாளர் மேயர் நா.குணசேகரன் முன்னாள் எம்.எல்.ஏ. எஸ். மாங்குடி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் பி. எல். ராமச்சந்திரன் இந்து முன்னணி மாவட்ட தலைவர் அக்னி பாலா, காரைக்குடி மாநகர தேவர் பேரவை வி.கே. ராமசாமி , துரை. காளி முத்து காரைக்குடி மறவர் சங்க தலைவர் செந்தில் நாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் தேவகோட்டை நகர் கழக செயலாளர் பெரி. பாலா ஒன்றிய செயலாளர்கள் சுப. சின்னத்துரை, நாகனிரவி, லெ. மு.,ரவிச்சந்திரன், ஒன்றிய துணை செயலாளர் எஸ். முத்துக்குமார், புதுவயல் பேரூர் கழக செயலாளர் பக்ருதீன் அலி அகமது, காரைக்குடி மாநகர, ஒன்றிய கழக நிர்வாகிகள், துணை செயலாளர் சொ.கண்ணன், வக்கீல் பாலசுப்பிரமணியன் , மாவட்ட பிரதிநிதி ஒட்டுனர் ரமேஷ், கா.சுப்பையா, மெ.பழனியப்பன், வர்த்தக அணி ருக்மா சரவணன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார், துணை அமைப்பாளர் ஜெபதுரை ,திருமதி சத்யா,லட்சுமி கணேஷ் ,வட்டச் செயலாளர் பாண்டி, ராம.அன்பழகன், போஸ், குணசேகரன், நகர் இளைஞரணி அமைப்பாளர்கள் தினகரன், கார்த்திக், மதன்ராஜ், துணை அமைப்பாளர்கள் மலர் விழி பழனியப்பன், பாண்டி , மெ.கார்த்திகேயன், விஜயகுமார், தா. ராஜா குரு. பாலு முகமது சித்திக் திருஞானம், அன்பு தென்னவன், முன்னாள் கவுன்சிலர் ரவி மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள். முன்னதாக டி. முருகேசன் வரவேற்புப் பேசினார்.

ஆப்பனூர் கணேசன் நன்றி கூறினார். விழா விற்கான ஏற்பாடுகளை எஸ். ஆர் .தேவர் தலைமையில் விழா குழுவினர் செய்திருந்தார்கள்.

பண்டிகையை ஒட்டி கூட்ட நெரிசலை தவிர்க்க மேலும்

6 சிறப்பு ரயில்கள் இயக்கம்!

தெற்கு ரயில்வே அறிவிப்பு

சென்னை,நவ.3-

தீபாவளியை ஒட்டி கூட்ட நெரிசலை தவிர்க்க மேலும் 6 சிறப்பு ரயில்கள் இயக்கபடும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது. நவ.7ல் எழும்பூர் - ராமேஸ்வரம் சிறப்பு ரயில் எழும்பூரில் இருந்து நள்ளிரவு 12.30 மணிக்கு புறப்படும். நவ.9ல் தாம்பரம் -செங்கோட்டை சிறப்பு ரயில் தாம்பரத்தில் இருந்து இரவு 11.55 மணிக்கு புறப்படும். சிறப்பு ரயில்களுக்கான டிக்கெட் முன்பதிவு நாளை காலை 8 மணிக்கு தொடங்குகிறது.



சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் புதுப்பிக்கப்பட்ட பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலையை முன்னாள் அமைச்சர் சிவகங்கை மாவட்டச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார். உடன் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், சிலை அமைப்பு குழுத் தலைவர் கலைஞர் எஸ்.ஆர்.தேவர், மாவட்ட துணைச் செயலாளர் த.சேங்கைமாறன் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.

